**திருச்செங்கோடு நகராட்சி**

**நகர் மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கை தீர்மானம் , நாள்.29.04.2022 ன் உண்மை நகல்**

**பொருள் எண்.1**

ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் 2022–ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

பதிவு செய்யலாம்.

**(கோப்பு.எண். 2059 /2022/சி1)**

**நகர் மன்ற தீர்மானம் எண்.91 , நாள்.29.04.2022.**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2022–ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

பதிவு செய்யலாம்.

**(கோப்பு.எண். 2059 /2022/சி1)**

**நகர் மன்ற தீர்மானம் எண்.92, நாள்.29.04.2022.**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.3**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.வை.சீனிவாசன் என்பவரை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 15.11.2019–ம் தேதிய ஆணையின்படி திருமங்கலம் நகராட்சியில் இருந்து திருச்செங்கோடு நகராட்சிக்கு பணி மாறுதல் செய்யப்பட்டதை ஆட்சேபித்து சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD)No.24455 of 2019 and W.M.P.(MD) Nos.21087 & 22485 of 2019 & 2805 of 2020 தொடரப்பட்டு கடந்த 03.12.2020 தேதியன்று வரப்பெற்ற தீர்ப்பின் அடிப்படையில் திருச்செங்கோடு நகராட்சியில் 07.12.2020 முற்பகல் முதல் பணியில் இணைந்து கொண்டார். தற்போது 18.11.2019 முதல் 06.12.2020 வரை 385 நாட்கள் பணிபுரியாத காலத்தினை வரன்முறை செய்து ஊதியம் வழங்க கோரி சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் நகராட்சி நிர்வாகத்தை எதிர்த்து வழக்கு எண் W.P.(MD)No.5672 of 2022 வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் நகராட்சி சார்பாக அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.D.சசிகுமார் அவர்களை ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்கான தொகை ரூ.9,500/–ஐ பொது நிதியில் இருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு.எண். 8974 /2021/சி1)**

**நகர் மன்ற தீர்மானம் எண்.93 , நாள்.29.04.2022.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான, பழைய பேருந்து நிலையத்தில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரையிலான காலத்திற்கு உரிமம் அனுபவித்துக்கொள்ள 19.04.2022 அன்று நடைபெற்ற மறு

பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளியில், ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை, பொது ஏலத்தில் கீழ்கண்ட நபர்கள் கலந்துக்கொண்டு உச்சக்கேள்வி கோரியதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | உச்ச ஏல கேள்வித் தொகை |
|---|---|---|
| 1 | செ.ராதாகிருஷ்ணன் த/பெ செல்லையா,<br>341, குடித்தெரு, சாணார்பாளையம்,<br>சூரியம்பாளையம், திருச்செங்கோடு. | ரூ.1,42,000/– மட்டும் |
| 2 | ந,மனோஜ் த/பெ நாகராஜன்,<br>6ஏ/1பி, முத்துசாதி சந்து, திருச்செங்கோடு. | ரூ.1,41,500/– மட்டும் |

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

நடைப்பெற்ற பொது ஏலத்தில் வ.எண்.1ல் கண்டுள்ள திரு.செ.ராதாகிருஷ்ணன் த/பெ செல்லையா என்பவர் உச்ச கேள்வியாக ரூ.1,42,000/– என கோரியுள்ளார், இது சென்றாண்டின் (2021–2022) உரிமத்தொகையான ரூ.1,30,000/– காட்டிலும் ரூ.12,000/– கூடுதலாக சென்றுள்ளது. எனவே மேற்படி உச்சக் கேள்வி தொகையை மன்றம் உறுதி செய்யலாம்.

**<u>கோப்பு எண். 9202/2020/அ3</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.94 , நாள்.29.04.2022.</u>**

திரு.செ.ராதாகிருஷ்ணன் த/பெ செல்லையா என்பவரின் உச்ச கேள்வி தொகை ரூ.1,42,000/– யினை உறுதி செய்யப்பட்டது.

**பொருள் எண்.5**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையகடை எண்.71–ஐ திருமதி.ஆர்.ஜானகி மற்றும் திரு.பி.எஸ்.மணிகண்டன் என்பவர்கள் சேர்ந்து கூட்டாக மேற்கண்ட கடையினை மாத உரிமத்திற்கு எடுத்து தொழில் செய்து வந்த நிலையில் திருமதி. ஆர்.ஜானகி என்பவர் தனது வயது முதிர்வு காரணமாக தனது பெயரிலுள்ள மேற்காணும் கடையின் உரிமத்தை தனது தொழில் கூட்டாளியான திரு.பி.எஸ்.மணிகண்டன் என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்துக் கொள்ளும் வகையில் சம்மத பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். அதன்படி திரு.பி.எஸ்.மணிகண்டன் பெயர் மாற்றத்திற்கான விண்ணப்ப தொகையையும் 12 மாத வாடகையினை முன்வைப்பு தொகையாகவும் செலுத்தியதை தொடர்ந்து திரு.பி.எஸ்.மணிகண்டன் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே, தற்போது திருமதி. ஆர்.ஜானகி என்பவர் செலுத்திய வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் கீழ்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

| வ. எண் | தேதி | இரசீது எண் | பதிவேட்டின் பக்கம் எண் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 10.06.2004 | 2086 | 21 VOL–VI | ரூ.1,50,000/– |
| 2 | 16.03.2015 | 1411882 | 4 (2014–15) | ரூ.9,528/– |
| 3 | 27.05.2016 | 161421 | 16(2016–17) | ரூ.50,000/– |
| 4 | 07.06.2016 | 161835 | 18 (2016–17) | ரூ.10,000/– |
| 5 | 29.06.2016 | 162754 | 21 (2016–17) | ரூ.10,000/ |
| 6 | 08.07.2016 | 163097 | 21 (2016–17) | ரூ.10,000/ |
| 7 | 15.07.2016 | 163404 | 22 (2016–17) | ரூ.10,000/ |
| 8 | 03.08.2016 | 163955 | 23 (2016–17) | ரூ.30,000/ |
| | | மொத்தம் | | ரூ.2,79,528/– |

மேற்கண்ட தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளதால் ரூ.2,79,528/–ஐ திருமதி.ஆர்.ஜானகி என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண். 581 /2022/பி1</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.95 , நாள்.29.04.2022.</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையகடை எண்.72—ஐ திரு.ஆ.செல்வராஜ் மற்றும் திரு.பி.எஸ்.மணிகண்டன் என்பவர்கள் சேர்ந்து கூட்டாக மேற்கண்ட கடையினை மாத உரிமத்திற்கு எடுத்து தொழில் செய்து வந்த நிலையில் திரு.ஆ.செல்வராஜ் என்பவர் தனது வயது முதிர்வு காரணமாக தனது பெயரிலுள்ள மேற்காணும் கடையின் உரிமத்தை தனது தொழில் கூட்டாளியான திரு.பி.எஸ்.மணிகண்டன் என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்துக் கொள்ளும் வகையில் சம்மத பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். அதன்படி திரு.பி.எஸ்.மணிகண்டன் பெயர் மாற்றத்திற்கான விண்ணப்ப தொகையையும் 12 மாத வாடகையினை முன்வைப்பு தொகையாகவும் செலுத்தியதை தொடர்ந்து திரு.பி.எஸ்.மணிகண்டன் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே, தற்போது திரு.ஆ.செல்வராஜ் என்பவர் செலுத்திய வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் கீழ்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

| வ. எண் | தேதி | இரசீது எண் | பதிவேட்டின் பக்கம் எண் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 16.03.2007 | 6102222 | 34 VOL—VII | ரூ.1,50,000/— |
| 2 | 05.05.2016 | 160903 | 12 (2016—17) | ரூ.1,20,000/— |
| மொத்தம் | | | | ரூ.2,70,000/— |

மேற்கண்ட தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளதால் ரூ.2,70,000/—ஐ திரு.ஆ.செல்வராஜ் என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:—</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>(கோப்பு.எண். 582 /2022/பி1)</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.96 , நாள்.29.04.2022.</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

திருச்செங்கோடு நகராட்சியில் அருள்மிகு அர்த்தனாரீஸ்வரர் தேர்த்திருவிழாவிற்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமம் — 2017,2018 மற்றும் 2019—க்கு கடந்த 15.03.2017,28.03.2018 மற்றும் 12.02.2019 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பொது ஏலத்தில் மனுதாரரான திரு.எம்.அருள் அவர்கள் முன்வைப்புத்தொகை ரூ.50,000/—(ஒவ்வொரு ஏலத்திற்கும்) செலுத்தி ஏலத்தில் கலந்துக்கொண்டதாகவும், மேற்படி ஏலங்களில் உரிமம் ஏதும் கிடைக்கபெறாததால் தான் செலுத்திய முன்வைப்புத்தொகை மொத்தம் ரூ.1,50,000/—யை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். எனவே, தற்போது திரு.எம்.அருள் என்பவர் செலுத்திய வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கீழ்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

| வ. எண் | தேதி | இரசீது எண் | பதிவேட்டின் பக்கம் எண் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 15.03.2017 | 25580 | 24 (2016—2017) | ரூ.50,000/— |
| 2 | 27.03.2018 | 42042 | 30 (2017—2018) | ரூ.50,000/— |
| 3 | 11.02.2019 | 20542 | 34 (2018—2019) | ரூ.50,000/— |
| மொத்தம் | | | | ரூ.1,50,000/— |

மேற்கண்ட தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளதால் ரூ.1,50,000/—ஐ திரு.எம்.அருள் என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:—</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.
**<u>(கோப்பு.எண். 2499/2022/பி1)</u>**

**நகர் மன்ற தீர்மானம் எண்.97 , நாள்.29.04.2022.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

திருச்செங்கோடு நகராட்சியில் அருள்மிகு அர்த்தனாரீஸ்வரர் தேர்த்திருவிழா 2018–க்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமம் கடந்த 28.03.2018–ம் தேதியில் நடைபெற்ற பொது ஏலத்தில் மனுதாரரான திரு.வி.வினித் அவர்கள் முன்வைப்புத்தொகை ரூ.50,000/– செலுத்தி ஏலத்தில் கலந்துக்கொண்டதாகவும், மேற்படி ஏலத்தில் உரிமம் ஏதும் கிடைக்கபெறாததால் தான் செலுத்திய முன்வைப்புத்தொகை ரூ.50,000/– யை திரும்ப வழங்க கோரியுள்ளார். எனவே, தற்போது திரு.வி.வினித் என்பவர் செலுத்திய வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கீழ்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

| வ. எண் | தேதி | இரசீது எண் | பதிவேட்டின் பக்கம் எண் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 27.03.2018 | 42046 | 30 (2017–2018) | ரூ.50,000/– |
| மொத்தம் | | | | ரூ.50,000/– |

மேற்கண்ட தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளதால் ரூ.50,000/–ஐ திரு.வி.வினித் என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு.எண். 2500/2022/பி1)**

**நகர் மன்ற தீர்மானம் எண்.98 , நாள்.29.04.2022.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான பழைய பாவடி தினசரி நாளங்காடியில் சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை மனுதாரரான திரு.டி.எஸ்.திருக்குமரன் அவர் கடந்த 01.04.2018முதல் 31.03.2021 முடிய 3 ஆண்டிற்கு உரிமத்திற்கு எடுத்து நடத்தி வந்தார். அதற்கு அன்னார் முன்வைப்புத்தொகையாக ரூ.2,00,000/–செலுத்திருந்தார். தற்போது மேற்கண்ட உரிமத்திற்கான உரிம காலம் முடிவிற்கு வந்ததால், அன்னார் செலுத்திய மேற்கண்ட முன்வைப்புத்தொகையை திரும்ப வழங்க கோரியுள்ளார். எனவே, திரு.டி.எஸ்.திருக்குமரன் என்பவர் செலுத்திய வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கீழ்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

| வ. எண் | தேதி | இரசீது எண் | பதிவேட்டின் பக்கம் எண் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 22.01.2018 | 26821 | 29 (2017–2018) | ரூ.1,00,000/– |
| 2 | 22.01.2018 | 26822 | 29 (2017–2018) | ரூ.1,00,000/– |
| மொத்தம் | | | | ரூ.2,00,000/– |

மேற்கண்ட தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளதால் ரூ.2,00,000/–ஐ திரு.டி.எஸ்.திருக்குமரன் என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு.எண். 3281/2021/பி1)**

**நகர் மன்ற தீர்மானம் எண்.99 , நாள்.29.04.2022.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

திருச்செங்கோடு நகராட்சியில் 2018—2019ஆம் ஆண்டில் சந்தைபேட்டையில் உள்ள வாரச்சந்தை மற்றும் சாலப்பாளையம் பூங்காவில் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி M/s.ஸ்டேன்லி ஹைடெக் கன்ஸ்ட்ரக்சன் கம்பெனி (பி) லிடெட்., திருச்செங்கோடு. நிறுவனம் முன்வைப்புத் தொகையாக ரூ.1,27,000/— செலுத்திருந்தார். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி நிர்வாக காரணங்களால் இரத்து செய்யப்பட்டதால் முன்வைப்புத் தொகையை திரும்ப வழங்க கோரியுள்ளார். தற்போது M/s.ஸ்டேன்லி ஹைடெக் கன்ஸ்ட்ரக்சன் கம்பெனி (பி) லிடெட்., திருச்செங்கோடு. நிறுவனம் செலுத்திய வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் கீழ்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

| வ. எண் | தேதி | இரசீது எண் | பதிவேட்டின் பக்கம் எண் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 22.09.2018 | BRV 8016 | 27 (2018—2019) | ரூ.75,000/— |
| 2 | 22.09.2018 | BRV 8036 | 27 (2018—2019) | ரூ.52,000/— |
| மொத்தம் | | | | ரூ.1,27,000/— |

மேற்கண்ட தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளதால் ரூ.1,27,000/—ஐ M/s.ஸ்டேன்லி ஹைடெக் கன்ஸ்ட்ரக்சன் கம்பெனி (பி) லிடெட்., திருச்செங்கோடு. நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு.எண். 3082/2021/பி1)**

**நகர் மன்ற தீர்மானம் எண்.100 , நாள்.29.04.2022.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

திருச்செங்கோடு நகராட்சி குடிநீர் பிரிவில் இயங்கி வரும் TN 28 T 8436 குடிநீர் வாகனத்தில் உள்ள டேங்கினை பொது சுகாதாரபிரிவில் இயக்கப்படாத நிலையில் உள்ள TN 34 0518 டம்பர்பின் வாகனத்தில் பொருத்தவும் மற்றும் TN 34 0518—ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு 15.03.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரும் அறிவிப்பு வழங்கப்பட்ட நிலையில் TNURBANESEVA SERVOR பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டதால் ஒப்பந்தப்புள்ளி கட்டணம் செலுத்தமுடியவில்லை. எனவே மேற்காணும் பணிக்கு 04.04.2022—ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டு 08.04.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் விவரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்தபுள்ளி வழங்கிய நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை | ஒப்பீடு |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ வெள்ளிங்கிரி ஆட்டோ ஓர்க்ஸ், திருச்செங்கோடு. | ரூ.2,25,321/— | குறைவு |
| 2 | சுப்ரீம் கார்ஸ், நாமக்கல். | ரூ.2,28,979/— | அதிகம் |

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான தொகை குறிப்பிட்டு வழங்கிய வரிசை எண்.1—ல் காணும் ஸ்ரீ வெள்ளிங்கிரி ஆட்டோ ஓர்க்ஸ், திருச்செங்கோடு என்ற நிறுவனத்திற்கு TN 28 T 8436 குடிநீர் வாகனத்தில் உள்ள டேங்கினை பொது சுகாதாரபிரிவில் இயக்கப்படாத நிலையில் உள்ள TN 34 0518 டம்பர்பின் வாகனத்தில் பொருத்தவும் மற்றும் TN 34 0518—ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:—**

1. அனுமதிக்கலாம்.
2. ஒப்பந்தபுள்ளியில் குறைவான தொகை குறிப்பிட்டு வழங்கிய ஸ்ரீ வெள்ளிங்கிரி ஆட்டோ ஓர்க்ஸ், திருச்செங்கோடு என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு.எண். 8004 /2022/எச்1)**

**நகர் மன்ற தீர்மானம் எண்.101 , நாள்.29.04.2022.**

குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஸ்ரீ வெள்ளிங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN 34 AC 1165 ஆட்டோ திடக்கழிவு மேலாண்மை பணிக்காக 2019ல் கொள்முதல் செய்யப்பட்டு இயங்கி வரும் நிலையில் தற்போது இவ்வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள பேட்டரி பழுதடைந்துள்ளது. எனவே மேற்காணும் வாகனத்திற்கு புதியதாக பேட்டரி கொள்முதல் செய்யும் பணிக்கு பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் நிறுவனமான திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு மையம் லிமிடெட் SL (SPL) 170 வழங்கிய விலைப்புள்ளி தொகை ரூ.6,000/—ஐ ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. TN 34 AC 1165 வாகனத்திற்கு பேட்டரி கொள்முதல் செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் நிறுவனமான திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு மையம் லிமிடெட் SL (SPL) 170 வழங்கிய விலைப்புள்ளி தொகை ரூ.6,000/—ஐ ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 2285/2022/எச்2)**

**நகர் மன்ற தீர்மானம் எண்.102 , நாள்.29.04.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN 34 AC 1120 ஆட்டோ திடக்கழிவு மேலாண்மை பணிக்காக 2019ல் கொள்முதல் செய்யப்பட்டு இயங்கி வரும் நிலையில் தற்போது இவ்வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள பேட்டரி பழுதடைந்துள்ளது. எனவே மேற்காணும் வாகனத்திற்கு புதியதாக பேட்டரி கொள்முதல் செய்யும் பணிக்கு பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் நிறுவனமான திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு மையம் லிமிடெட் SL (SPL) 170 வழங்கிய விலைப்புள்ளி தொகை ரூ.6,000/—ஐ ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. TN 34 AC 1120 வாகனத்திற்கு பேட்டரி கொள்முதல் செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் நிறுவனமான திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு மையம் லிமிடெட் SL (SPL) 170 வழங்கிய விலைப்புள்ளி தொகை ரூ.6,000/—ஐ ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 2285/2022/எச்2)**

**நகர் மன்ற தீர்மானம் எண்.103 , நாள்.29.04.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு —F பிளாக்—2, நகரளவு எண்—11/2—ல் பட்டாதாரர் திரு.ராஜாமணி (ம) அவரது குடும்பத்தினர் பெயர் சேர்க்க கூடாது என திரு.கே.கிருஷ்ணமூர்த்தி என்பவர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருச்செங்கோடு வழக்கு எண். O.S.No.211/2012ல் நகராட்சி ஆணையர் அவர்களை 5வது பிரதி வாதியாக சேர்க்கப்பட்டு வழக்கு தொடர்ந்துள்ளார். தற்போது வழக்கு எண்.CRP .473/2022—ன் படி சென்னை, உயர் நீதிமன்றத்தில் மனுதாரர் வழக்கு தாக்கல் செய்திருந்ததை 01.03.2022 தீர்ப்பின்படி, மனுதாரரின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்காணும் வழக்கில், அரசு வழக்கறிஞர்

திரு.பி.ஹரிஷ் நகராட்சி சார்பாக ஆஜராகி, தீர்ப்பாணை பெற்று தனது 01.03.2022 தேதி கடிதத்தில், மேற்படி வழக்கில் ஆஜராகியதற்கு வழக்குரை கட்டணமாக ரூ.15,000/—ம் வழங்க கோரியுள்ளார். திரு.பி.ஹரிஷ் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/—வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:—**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு.எண். 7496 /2012/எப்1 )**

**நகர் மன்ற தீர்மானம் எண்.104 , நாள்.29.04.2022.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு —D, பிளாக்—16, TS NO—16/2A-ல் வசிக்கும் திருமதி.எம்.சாந்தி என்பவர் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பம் சமர்ப்பித்தார். கட்டிட விதிகளுக்கு முரணாக இருந்த காரணத்தால் கட்டிட அனுமதி மறுத்து உத்தரவு அனுப்பப்பட்டது. அதன் மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் (WPNO.15058/2013) என்ற எண்ணில் மனுதாரர் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்ததை அடுத்து நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.எஸ்.சரவணன் அவர்களுக்கு வழக்கு நடத்தி 02.12.2022 அன்று நீதிமன்றத்தில் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெறப்பட்டு வழக்கு முடிவுற்றதால் உயர்நீதிமன்ற உத்தரவு நகல் இணைத்தும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/— வழங்கவும் கடிதம் அனுப்பி உள்ளார். வழக்கறிஞர் திரு.எஸ்.சரவணன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினம் ரூ.15,000/—க்கு நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2428/2015/எப்1**

**நகர் மன்ற தீர்மானம் எண்.105 , நாள்.29.04.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

அரசாணை எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.09.2021—இன்படி, நமக்கு நாமே திட்டம் 2021—22 (NNT)—இன் கீழ் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.27519—23/2021/P2, நாள்.14.03.2022—ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அதன்படி 08.04.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூராய்வு செய்யப்பட்டு 12.04.2022 அன்று Price Bid திறக்கப்பட்டது. அதன்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளியின் படி கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட அம்மன்குளத்தை (வார்டு - டி பிளாக் -1 நகரளவை எண்.3/1) மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ. 30.00 இலட்சம் | 1. Thiru.G.Mohanraj, Tiruchengode.<br>2. AA constructions, Namakkal. | (-)0.09 % குறைவு<br>(+) 0.86 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள Thiru.G.Mohanraj, Tiruchengode அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலையான மதிப்பீட்டை விட (-)0.09% குறைவு கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (—)0.09% குறைவாக கொடுத்துள்ள Thiru.G.Mohanraj, Tiruchengode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணியின் செலவினத்தை நமக்கு நாமே திட்டம் 2021—22 (NNT)-ன் கீழ் பொதுமக்கள் பங்களிப்பு தொகையிலிருந்து (மூன்றில் ஒரு பங்கு) மற்றும் திட்ட நிதியிலிருந்தும் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண். 8624/2021/இ1—4</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.106 , நாள்.29.04.2022.</u>**

மதிப்பீட்டை விட (—)0.09% குறைவாக கொடுத்துள்ள Thiru.G.Mohanraj, Tiruchengode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

அரசாணை (நிலை) எண்.15, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.20.01.2022—இல் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021-22-ன் கீழ் ரூ.118.00 இலட்சத்திற்கு கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் நகராட்சி நிர்வாக தலைமைப்பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.001/2022/DO1, நாள்.23.03.2022—ல் தொழில்நுட்ப அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி 08.04.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூராய்வு செய்யப்பட்டு 12.04.2022 அன்று Price Bid திறக்கப்பட்டது. அதன்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளியின் படி கொடுத்துள்ள விலை விகிதம் % | விலைகுறைப்பு கேட்பு கடிதத்திற்கு பின் குறைக்கப்பட்ட விலை விகிதம் |
|---|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பெரிய தெப்பக்குளம் (Ward -E Block -26 TSLR No.1) மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ. 118.00 இலட்சம் | 1. M/s Stanely Hitech Construction company Pvt Ltd, Tiruchengode | (+)5.01 % அதிகம் | (+)2.49 % அதிகம் |
| | | 2. KSN Construction, Gudiyatham. | (+) 8.73 % அதிகம் | |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s Stanely Hitech Construction company Pvt Ltd, Tiruchengode நிறுவனத்தின் ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு கடிதம் கோரப்பட்டத்தில் தனது ஒப்பந்தப்புள்ளி விலையான மதிப்பீட்டை விட (+) 5.01% கொடுத்துள்ளதில் இருந்து 2.52 % விலைக்குறைப்பு செய்து இறுதியாக மதிப்பீட்டை விட (+) 2.49 % அதிகம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (+)2.49% கூடுதலாக கொடுத்துள்ள M/s Stanely Hitech Construction company Pvt Ltd, Tiruchengode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணியின் மதிப்பீட்டிற்கான செலவினத்தை கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021-22-ன் கீழ் ஒதுக்கப்படும் நிதிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.6818 –13 /2021/இ1</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.107 , நாள்.29.04.2022.</u>**

மதிப்பீட்டை விட (+)2.49% கூடுதலாக கொடுத்துள்ள M/s Stanely Hitech Construction company Pvt Ltd, Tiruchengode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

அரசாணை (நிலை) எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.20.01.2022–இல் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021-22-ன் கீழ் ரூ.364.00 இலட்சத்திற்கு (KNMT திட்ட நிதி – ரூ.254.80 இலட்சம் மற்றும் நகராட்சி பங்குத்தொகை – ரூ.109.20 இலட்சம்) கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்.31, நாள்.24.01.2022–இல் கோவை CIT கல்லூரி தொழில்நுட்ப வடிவமைப்பு வரைபடத்தின்படி, மதிப்பீடு தயார் செய்யப்பட்டதில் அவசியம் சேர்க்கப்படவேண்டிய கூடுதல் இனங்கள் சேர்த்து மதிப்பீடு ரூ.395.00 இலட்சத்திற்கு (KNMT திட்ட நிதி – ரூ.254.80 இலட்சம் மற்றும் நகராட்சி பங்குத்தொகை–ரூ.140.20 இலட்சம்) தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி தொகைக்கு கூடுதலாக ஏற்படும் கூடுதல் செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்ற ஒப்புதல் பெறப்பட்டது. மேலும், நகராட்சி நிர்வாக தலைமைப்பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.001/2022/DO1, நாள்.16.02.2022–ல் ரூ.395.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி 06.04.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூராய்வு செய்யப்பட்டு 12.04.2022 அன்று Price Bid திறக்கப்பட்டது. அதன்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளியின் படி கொடுத்துள்ள விலை விகிதம் % | விலைகுறைப்பு கேட்பு கடிதத்திற்கு பின் குறைக்கப்பட்ட விலை விகிதம் |
|---|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான SSD ரோடு புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள தினசரி சந்தையை மேம்படுத்துதல் (வார்டு எண்.18, நகரளவை சர்வே எண்.3/1) | ரூ. 395.00 இலட்சம் | 1. M/s CP Construction and Infrastructure Erode<br>2. K.S.K Constructions, Erode | (+)4.98 % அதிகம்<br>(+) 6.74 % அதிகம் | (+)2.29 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s CP Construction and Infrastructure, Erode நிறுவனத்தின் ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு கடிதம் கோரப்பட்டத்தில் தனது ஒப்பந்தப்புள்ளி விலையான மதிப்பீட்டை விட (+)4.98% கொடுத்துள்ளதில் இருந்து 2.69% விலைக்குறைப்பு செய்து இறுதியாக மதிப்பீட்டை விட (+)2.29% அதிகம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (+)2.29% கூடுதலாக கொடுத்துள்ள M/s CP Construction and Infrastructure, Erode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணியில் ரூ.254.80 இலட்சம் செலவினத்தை கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021-22-ன் கீழ் ஒதுக்கப்படும் நிதிலிருந்தும், மதிப்பீட்டு தொகையில் மீதமுள்ள ரூ.140.20 இலட்சதை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.5760 /2021/இ1</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.108 , நாள்.29.04.2022.</u>**

மதிப்பீட்டை விட (+)2.29% கூடுதலாக கொடுத்துள்ள M/s CP Construction and Infrastructure, Erode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.19**

திருச்செங்கோடு நகராட்சி அலுவலகக் கட்டிடத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில் நகர்மன்ற கூட்டம் நடைபெறும் போது நகர்மன்றத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பேச போதிய ஒலிப்பெருக்கி (மைக்) வசதி இல்லாததால் புதியதாக நகர்மன்ற கூட்ட அரங்கில் Amplifier, Mixer, Mike

with Stand மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000 –க்கு (ரூ.2.50 இலட்சம்) மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணியை திருச்செங்கோடு வேளண்மை பொறியியல் கூட்டுறவு சங்கம், திருச்செங்கோடு மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.2708 /2022/இ1</u>**
**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.109 , நாள்.29.04.2022.</u>**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.20**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28, குள்ளவண்ணான்காடு பகுதியில் மழைநீர் வடிகால் (சாக்கடை) அமைக்க எதிர்ப்பு தெரிவித்து திரு.S.R.வெங்கடாச்சலம் மற்றும் திரு.R.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருச்செங்கோடு–ல் I.A.No.3/2021 in OS.No.146/2021–ல் வழக்கு தொடர்ந்துள்ளனர். மேலும், இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கை எதிர்த்து வழக்காட நகராட்சி வழக்கறிஞர் திரு.S.ரமேஷ் B.com., B.L., அவர்களுக்கு வழக்கேற்பிதழ் (வக்காளத்து) வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.5000/– திரு.S.ரமேஷ், வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.2517 /2022/இ1</u>**
**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.110 , நாள்.29.04.2022.</u>**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.21**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.06, சின்னான்கிணறு பகுதியில் உள்ள நகராட்சி கிணற்றின் ஒரு பக்கவாட்டு சுவர் முழுவதும் சரிந்து கிணற்றுக்குள் விழுந்துள்ளதால் அருகில் உள்ள குடியிருப்புகள் இடிந்து விழும் நிலையில் உள்ளது. மேற்படி, கிணற்றை நகர்மன்றத்தலைவர், நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் நேரடி ஆய்வின் போது ஆபத்தான நிலையில் உள்ள கிணற்றை உடனடியாக சரிசெய்ய அறிவுறுத்தப்பட்டது. எனவே, மேற்கண்ட கிணற்றின் பக்கவாட்டு சுவரை கான்கீரிட் சுவராக அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.12,00,000/–க்கு (ரூ.12.00 இலட்சம்) மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.2709/2022/இ1</u>**
**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.111 , நாள்.29.04.2022.</u>**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.22**

திருச்செங்கோடு நகராட்சியில் சொத்துவரி மறு சீராய்வு – 2022 பணிக்கான Master List, Working sheet, Special Notice, Dement Notice மற்றும் Hand Book ஆகியவை 33 வார்டுகளுக்கும் பிரிண்ட் செய்ய

வேண்டியுள்ளதாலும், அனைத்து வார்டுகளுக்கும் தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் குத்தகை மற்றும் வரியில்லா இனங்களுக்கு Demand Notice மற்றும் Hand Book பிரிண்ட செய்ய வேண்டியுள்ளது. தற்போது பொதுப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் Cannon Xerox M/c IR 2206 கொள்முதல் செய்யப்பட்டு சுமார் 3 ஆண்டுகள் மேல் ஆவதாலும், சுமார் 250000 நகல்கள் மேல் பிரிண்ட் செய்யப்பட்டுள்ளதாலும் மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள போதுமானதாக இல்லை. எனவே, சொத்துவரி சீராய்வு 2022 மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள புதியதாக Cannon Image Runner IR 2625 Xerox M/c அரசு அங்கீகரித்த Government E-Market Place (GEM) விலையான ரூ.1,65,318/–க்கு Cannon Xerox company Authorised Dealer M/s COMTECHK, Salem நிறுவனம் மூலம் வாங்க மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2748/2022/இ1**
**நகர் மன்ற தீர்மானம் எண்.112 , நாள்.29.04.2022.**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.23**

திருச்செங்கோடு நகராட்சியில் உள்ளாட்சித் தேர்தல் 2022 முன்னிட்டு வாக்குச்சாவடி மையங்களில் பந்தல் அமைத்தல், சேர் மற்றும் டேபிள் வாடகை மூலம் ஏற்பாடு செய்தல், தேவையான மின் வசதி மற்றும் மின் விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி செய்தல், வாக்குசாவடி எண் குறித்தல், மரத்தினால் ரேம்ப் அமைத்தல் மற்றும் வாக்குச் சாவடி அலுவலர்களுக்கு நடைபெறும் பயிற்சி வகுப்புகள் நடத்த மைக் மற்றும் டிவி பொருத்தும் பணி ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9,00,000/– தயார் செய்யப்பட்டு பணியின் அவசியம் அவசரம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ள 21.02.2022 ஆணையர் அனுமதி பெறப்பெற்று திரு.M.பூபதி, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு ரூ.9,00,000/– செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
மன்றத்தில் பதிவு செய்யலாம்.
**கோப்பு எண்.556/2022/இ1**
**நகர் மன்ற தீர்மானம் எண்.113 , நாள்.29.04.2022.**
பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.24**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் மக்காத குப்பைகளை பிரித்து சேமித்து வைக்க அனிமூர் உரக்கிடங்கில் மற்றும் மலைசுத்தி ரோடு MCC-க்களில் Resource Recovery Center (RRC) அமைக்கவும் மற்றும் அனிமூர் உரக்கிடங்கில் தீ பிடிக்காமல் கண்காணிக்க ஏதுவாக அனைத்து இடங்களிலும் மின் விளக்குகள் அமைக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2910/2022/இ1**
**நகர் மன்ற தீர்மானம் எண்.114 , நாள்.29.04.2022.**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.25**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான புதிய மற்றும் பழைய பேருந்து நிலைய கடைகள் மற்றும் இதர நகராட்சி கடைகளில் நகராட்சி பெயர் பலகை அமைக்கவும் மற்றும் கடை எண் குறிப்பிடவும் மற்றும்

திருச்செங்கோடு நகராட்சி எல்லைப் பகுதியில் அமைந்துள்ள வரவேற்பு பலகையை புனரமைக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.80,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.2909/2022/இ1</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.115, நாள்.29.04.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.26**

திருச்செங்கோடு நகராட்சி அலுவலகக் கட்டிடத்தில் LED விளக்குகளான "தமிழ் வாழ்க" என்ற பெயர் பலகை அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.2908/2022/இ1</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.116 , நாள்.29.04.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.27**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தற்சமயம் கோடை கால வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிலையம், மார்க்கெட், கடை வீதி மற்றும் முக்கிய இடங்களில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.2907/2022/இ1</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.117 , நாள்.29.04.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.28**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட அண்ணாபூங்கா டேங்க் அருகில், பச்சியம்மன் கோவில் டேங்க் அருகில், கரட்டுப்பாளையம், மாங்குட்டைப்பாளையம், குமரேசபுரம், கைலாசம்பாளையம், கொல்லப்பட்டி EB Office அருகில் மற்றும் கூட்டப்பள்ளி பள்ளிக்கூடம் அருகில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் புதியதாக மின் மோட்டார், பைப்லைன், கேபிள் ஸ்டாட்டர் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,50,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.2906/2022/இ1</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.118 , நாள்.29.04.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.29**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தொடர் மழைக்காலங்களில் மழைநீர் வெளியேற்ற புதியதாக 60m3/hr திறன்கொண்ட நீர் இறைக்கும் மோட்டார் பம்ப் ( Dewatering Pump) வாங்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.25,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2912/2022/இ1**
**நகர் மன்ற தீர்மானம் எண்.119 , நாள்.29.04.2022.**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.30**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, துப்பரவு பணியாளர் காலனி, சக்திவேல் நகர், வார்டு எண்.2, சண்முகபுரம், வார்டு எண்.3, கைலாசம்பாளையம் அருந்ததியர் தெரு, வார்டு எண்.5, நெசவாளர் காலனி பள்ளிக்கூடம், வார்டு எண்.13, அம்பேத்கார் நகர், வார்டு எண்.6, குமரேசபுரம், வார்டு எண்.7, தொண்டிக்கரடு வீடில்லாதோர் சங்க காலனி, வார்டு எண்.17, பாவடி, வார்டு எண்.21, கூட்டப்பள்ளி பூங்கா அருகில் சத்துணவு கூடம் அருகில் மற்றும் வார்டு எண்.22, ராஜகவுண்டம்பாளையம் பொது கழிப்பிடம் பகுதியில் புதியதாக சின்டெக்ஸ் டேங்க் மற்றும் Plat Form அமைக்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,80,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2911/2022/இ1**
**நகர் மன்ற தீர்மானம் எண்.120 , நாள்.29.04.2022.**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.31**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 17 வரையிலான பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறு தண்ணீர் விநியோகிக்க பயன்படுத்தப்பட்டு வரும் குழாய்கள் (உப்பு தண்ணீர்) பழுதடைந்துள்ளதால் உடனடியாக பழுதடைந்த குழாய்களை மாற்றி அமைக்க நகர்மன்ற தலைவர் ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டதன்படி, வார்டு எண்.1 முதல் 17 வரையிலான பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறு தண்ணீர் விநியோகிக்க பயன்படுத்தப்பட்டு வரும் குழாய்களை மாற்றி அமைக்க பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,50,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2914/2022/இ1**
**நகர் மன்ற தீர்மானம் எண்.121 , நாள்.29.04.2022.**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.32**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 முதல் 33 வரையிலான பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறு தண்ணீர் விநியோகிக்க பயன்படுத்தப்பட்டு வரும் குழாய்கள் (உப்பு தண்ணீர்) பழுதடைந்துள்ளதால் உடனடியாக பழுதடைந்த குழாய்களை மாற்றி அமைக்க நகர்மன்ற தலைவர் ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டதன்படி, வார்டு எண்.18 முதல் 33 வரையிலான பகுதிகளில் உள்ள

ஆழ்துளை கிணறு தண்ணீர் விநியோகிக்க பயன்படுத்தப்பட்டு வரும் குழாய்களை மாற்றி அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,50,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2905/2022/இ1**
**நகர் மன்ற தீர்மானம் எண்.122, நாள்.29.04.2022.**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.33**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் 2022–23–ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மான்ய கோரிக்கை அறிவிப்பு எண்.21–ல் திருச்செங்கோடு நகராட்சியில் புதியதாக சந்தை அமைக்கப்படும் என அறிவித்துள்ளார். அதன்படி, திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான சந்தைப்பேட்டை பகுதியில் அமைந்துள்ள வாரசந்தையை நவீன முறையில் புதியதாக அமைக்கப்பட உள்ளதால், தனியார் கலந்தாலோசகர் (Consultant) நியமித்து மண் பரிசோதனை (Soil test) மற்றும் வடிவமைப்பு (Structural Design) செய்து மதிப்பீடுகள் தயார் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிக் கோரியதை மன்றம் அங்கீகரிக்காலம்.

**கோப்பு எண்.2744/2022/இ1**
**நகர் மன்ற தீர்மானம் எண்.123, நாள்.29.04.2022.**
அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.34**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் 2022–23–ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மான்ய கோரிக்கை அறிவிப்பு எண்.24–ல் திருச்செங்கோடு நகராட்சி நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் (Knowledge centre) அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான சந்தைப்பேட்டை பகுதியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்க தனியார் கலந்தாலோசகர் நியமித்து மண் பரிசோதனை (Soil test) மற்றும் வடிவமைப்பு (Structural Design) செய்து மதிப்பீடுகள் தயார் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிக் கோரியதை மன்றம் அங்கீகரிக்காலம்.

**<u>கோப்பு எண்.2811/2022/இ1</u>**
**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.124 , நாள்.29.04.2022.</u>**
அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.35**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட அனிமூர் உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Bio Mining முறையில் அகற்ற பழைய குப்பைகளை Contour Survey மூலம் அளவீடு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிக் கோரியதை மன்றம் அங்கீகரிக்காலம்.

**<u>கோப்பு எண்.2913/2022/இ1</u>**
**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.125 , நாள்.29.04.2022.</u>**
அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.36**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, சூரியம்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் கட்டிடம் பராமரிப்பு பணிகள் மற்றும் சுற்றுச்சுவர், CCTV கேமரா அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.2917/2022/இ1</u>**
**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.126 , நாள்.29.04.2022.</u>**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.37**

திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில் சுவர்களுக்கு வர்ணம் பூசவும், ஜன்னல்களுக்கு Window Brildor புதியதாக அமைக்கவும், நடைப்பாதைக்கு தரைவிரிப்புகள் மற்றும் மேடையில் விரிப்புகள் அமைக்கவும் மரக்கதவுகளுக்கு பாலிஸ் வார்னிஷ் போடவும் மற்றும் நுழைவுவாயில் உள்ள மகாந்தமா காந்தி அறிஞர் அண்ணா சிலை மற்றும் சிலையை சுற்றி மேடை, கோபுரம் ஆகியவற்றிற்கு வர்ணம் பூசவும் மற்றும் இதர மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– க்கு மன்ற அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.2915/2022/இ1</u>**
**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.127 , நாள்.29.04.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.38**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30, கொல்லப்பட்டி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சுற்றுச்சுவர் அமைக்கவும், பள்ளி வகுப்பு அறைகளுக்கு வர்ணம் பூசவும் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2916/2022/இ1**
**நகர் மன்ற தீர்மானம் எண்.128, நாள்.29.04.2022.**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.
**பொருள் எண்.39**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, சீத்தாராம்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் தற்போது 455 மாணவர்கள் பயின்று வருவதால் தற்போதுள்ள வகுப்பறை போதுமானதாக இல்லாத காரணத்தினால் கூடுதலாக இரண்டு வகுப்பறைக் கட்ட நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையர் நேரடி ஆய்வின் போது பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பள்ளியில் புதியதாக கூடுதல் வகுப்பறைக் கட்டிடம் இரண்டு அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,00,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2922/2022/இ1**
**நகர் மன்ற தீர்மானம் எண்.129 , நாள்.29.04.2022.**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.40**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, நெசவாளர் காலனி பள்ளிக்கூடத்தில் தற்போது 565 மாணவர்கள் பயின்று வருவதால் தற்போதுள்ள வகுப்பறை போதுமானதாக இல்லாத காரணத்தினால் கூடுதலாக இரண்டு வகுப்பறைக் கட்ட நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையர் நேரடி ஆய்வின் போது பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. எனவே, மேற்கண்ட பள்ளியில் புதியதாக கூடுதல் வகுப்பறைக் கட்டிடம் இரண்டு அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,00,000/– க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2923/2022/இ1**
**நகர் மன்ற தீர்மானம் எண்.130 , நாள்.29.04.2022.**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.41**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30, கொல்லப்பட்டி நடுநிலைப்பள்ளியில் தற்போதுள்ள வகுப்பறை போதுமானதாக இல்லாத காரணத்தினால் கூடுதலாக இரண்டு வகுப்பறைக் கட்டிடம் கட்ட நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையர் நேரடி ஆய்வின் போது பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட பள்ளியில் புதியதாக இரண்டு வகுப்பறை கட்டிடம் கூடுதலாக கட்ட ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,00,000/— க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2921/2022/இ1**

**நகர் மன்ற தீர்மானம் எண்.131 , நாள்.29.04.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.42**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2, செங்கோடம்பாளையம் பொது கழிப்பிடத்திலிருந்து மேற்கே செல்லும் சாலையில் மழைக் காலங்களில் மழைநீர் செல்ல போதுமான மழைநீர் வடிகால் வசதி இல்லாததால் சாலையில் மழைநீர் தேங்கி அப்பகுதி வழியாக பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல மிகவும் சிரமமாக உள்ளதால், மேற்கண்ட பகுதிகளில் புதிய மழைநீர் வடிகால் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,80,000/—க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2918/2022/இ1**

**நகர் மன்ற தீர்மானம் எண்.132 , நாள்.29.04.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.43**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட SSD Road பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்துள்ளதால் மழைக் காலங்களில் மழைநீர் செல்லாமல் சாலையில் செல்வதால் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. மேலும், நகர்மன்ற தலைவர் ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மேற்கண்ட பகுதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகாலை அடைப்புகளை நீக்கம் செய்ய Concrete Slab அகற்றி புதியதாக மழைநீர் வடிகால் புதுப்பிக்க அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.12,00,000/—க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் 15வது மத்திய நிதி ஆணையம் திட்டம் 2022—23 (15th CFC 2022-23) —ன் நிதி ஒதுக்கீடு பெறும்போது அனுமதி பெற்று இப்பணியினை சேர்த்து செலவினத்தை சரிசெய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2919/2022/இ1**

**நகர் மன்ற தீர்மானம் எண்.133 , நாள்.29.04.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.44**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, பால்காரகுப்பண்ணன்காடு பகுதியில் KNMT திட்டத்தில் சாலை அமைக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் குடிநீர் பிரதான குழாய்கள் இல்லாததால் வீட்டு

குடிநீர் இணைப்புகள் வழங்க இயலாமல் உள்ளது. எனவே, புதியதாக குடிநீர் பிரதான குழாய்கள் (Pumping Main) அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/—க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண்.2920/2022/இ1</u>**
**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.134 , நாள்.29.04.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

ஒம்/ நளினிசுரேஷ்பாபு,
நகர் மன்ற தலைவர்,
திருச்செங்கோடு நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
திருச்செஙகோடு நகராட்சி.